பகவானும் பக்தனும் : ஸ்ரீ அரவிந்தர் எழுதிய மிக முக்கியமான நூல் லைஃப் டிவைன். இதை 1920 முதல் 1950 வரை எழுதி, திருத்தி மீண்டும் எழுதி முடித்தார். இந்த நூலைப்படித்த பேரறிஞர்கள் இது மிகவும் கடினமான நூல் என்று தான் விமரித்திருக்கிறார்கள். ஆனால் ஸ்ரீ கர்மயோகி அவர்கள் இதை சாதாரண மக்களும் புரிந்து கொள்ளக்கூடிய வகையிலே ஒவ்வொரு வாக்கியத்தையும் தமிழாக்கம் செய்து முதல் 5 அத்தியாயங்களை பரம்பொருள் என்ற புத்தகமாக வெளியிட்டிருக்கிறார். மற்ற அத்தியாயங்களை மலர்ந்தஜீவியம் என்ற மாத இதழில் வெளியிட்டு கொண்டிருக்கிறார். அதுவும் புத்தகமாக வெளிவர இருக்கிறது.

பகவானும் பக்தனும் என்ற புத்தகம் உரையாடலாக வெளியிடப்பட்டிருக்கிறது. **Life Divine** புத்தகம் படிக்கும் போது பக்தனுக்கு என்ன மாதிரி கேள்விகள் மனதில் எழும், அதற்கு பகவான் என்ன மாதிரி பதில் அளிப்பார் என்று ஊகித்து இந்தப்புத்தகத்தை, அருமையாக, சுவாரஸ்யமாக ஸ்ரீகர்மயோகி எழுதியிருக்கிறார். **Life Divine** புத்தகத்தில் நமக்கு வரும் சந்தேகங்களுக்கு அநேகமாக இந்தப் புத்தகத்தில் விடை கிடைத்து விடும்.

அமிர்தம் : மழை என்றால் **Nature's Determination** அது அதன் இஷ்டத்திற்குதான் பெய்யும் என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். மழையை நாம் நினைத்த நேரத்தில் பெய்விக்கலாம், வருண ஜபம் போன்ற எந்த முறையையும் கையாளாமல் வெறும் பிரார்த்தனையில் மட்டும் எப்படி இதை சாத்தியமாக்கலாம் என்று இதில் வரும் மழை என்ற கட்டுரை விளக்குகிறது. புதிய கண்ணோட்டம், புதிய கருத்துக்கள், ஸ்ரீ அன்னை இந்த பூவுலகத்திற்கே புதியவர் அதனால் இந்தப்புத்தகத்தில் சொல்லப்படும் விஷயங்கள் மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுக்கும். மேலும் பெண்களைப்பற்றி அன்னையின் கண்ணோட்டம், பாதுகாப்பு ஆயுள், கரண்டு, புஷ்பாஞ்சலி பற்றிய கட்டுரைகளும், 200 க்கும் மேற்பட்ட அன்னை அன்பர்களின் அனுபவங்களும் நூலில் இடம்பெற்றுள்ளது.

பேரொளியாகும் உள்ளொளி இந்த இரண்டு புத்தகங்களும்
நூறு பேர்கள் இதுவரை நாம் வாழ்ந்து

கொண்டிருக்கும் வாழ்க்கையைப் பற்றியும், அதை அன்னையின் முறைகளை ஏற்றுக் கொண்டு, மாறவேண்டிய இடங்களில் சிறிய மனமாற்றத்தை கொண்டு வந்து அன்னைவாழ்வாக, "வாழ்வே

யோகம்'' என்று பகவான் சொல்லியதை நடைமுறை படுத்த ஏதுவாக இருக்கும்.

பிரார்த்தனை பலிக்க வேண்டும் :

இந்தப்புத்தகம், உரையாடல் முறையில் அமைந்திருக்கிறது. அன்னை முறைகளை நடைமுறைப்படுத்தும்போது, ஏற்படக்கூடிய சந்தேகங்களை அன்பர் கேள்வியாக கேட்டு நண்பர் தீர்த்துவைக்கிறார். நம் மனதில் ஏற்படும் நிறைய சந்தேங்களுக்கு இந்த புத்தகம் பதில் சொல்லும்.

ஸ்ரீ அரவிந்தரின் காவிய இதழ்கள் : "சாவித்திரி" ஸ்ரீ அரவிந்தரின் மிக முக்கியமான நூல். சாவித்திரியை ஆங்கிலத்தில் பகவான் செய்யுள் வடிவத்தில் எழுதியிருக்கிறார். முழுக்கமுழுக்க அவருடைய யோக அனுபவங்களை சொல்வது சாவித்திரி. அதைப்படிப்பவர்களுக்கு புரிந்தாலும் புரியாவிட்டாலும் பலன் நிச்சயமாக உண்டு. ஸ்ரீ அரவிந்தரின் காவிய இதழ்கள் என்ற இந்த புத்தகத்தில் ஸ்ரீ காமயோகி அவர்கள் "சாவித்திரியின்" சாராம்சத்தையும் அதில் முக்கியமான சில பகுதிகளை தமிழில் மொழி பெயர்த்தும் இருக்கிறார். எமனுடன் சாவித்திரி நடத்தும் உரையாடல் முழுவதும் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது. இதைப்படித்துவிட்டு பகவானின் சாவித்திரி நூலைப்படித்தால் நன்றாக விளங்குகிறது, என்பது அனுபவம். படிக்கும் போதே மனத்தை மௌனம் ஆட்கொள்வதைப் பார்க்கலாம்.

யோகவாழ்க்கை விளக்கம் **I**<br>
யோகவாழ்க்கை விளக்கம் **II**<br>
யோகவாழ்க்கை விளக்கம் **III**

இந்த புத்தகங்களின் பெயரைப்பார்த்தவுடன் இது ஏதோ தத்துவமான நூல், யோகம் செய்பவர்களுக்கு உரியது என நினைக்கத் தோன்றுகிறதா? முழுக்க முழுக்க நம் அன்றாட வாழ்க்கையில் காணும் விஷயங்களையும், கருத்துக்களையும், அன்னையும் பகவானும் சொல்லும் "வாழ்வனைத்தும் யோகம்", என்ற இடத்துக்கு நம்மை உயர்த்துபவை இப்புத்தகங்கள். ஏதோ இந்த பூமியில் வந்து பிறந்து விட்டோம், வாழ்ந்துவிட்டு போய் சேருவோம் என்று நம்மில் 99 % இருக்கிறோம். "தரமான" வாழ்க்கை வாழ வேண்டும் என்று நினைப்பவர்களுக்கு இந்த நூல் மிகவும்

உபயோகமாக இருக்கும்.

ஸ்ரீ அரவிந்தம் : நமக்கு "நல்லவர்கள்" என்றால் எல்லோருடனும் நல்லபடியாக பழகுவது, பிறர் மனம் புண்படக்கூடாது என்பதற்காக பொய்யை அனுமதிப்பது, **Polished behaviour** என்று நினைக்கிறோம். நல்லவர்கள் என்பதற்கு என்ன அடையாளம் என்று அறிய இந்த புத்தகத்தை படியுங்கள் பிரமித்து போய் விடுவீர்கள். ஒரு 24 மணி நேரம் நல்லவராக இருக்க என்ன செய்ய வேண்டும் என்று ஒருபட்டியல் இருக்கிறது.

தத்துவஞானம்; : **Life Divine** என்ற நூல் பகவான் ஸ்ரீ அரவிந்தரின் மிக முக்கியமான நூல். அவற்றிலிருந்து சுமார் 60 கருத்துக்களை இந்த நூலில் ஸ்ரீ கர்மயோகி அவர்கள் எடுத்து அவற்றிற்கு சுருக்கமாக விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். **Life Divine,** ஆங்கிலத்தில் படித்தால் நமக்கு விளங்காத இந்த கடினமான நூலை மிக எளிமையாக்கி தந்திருக்கிறார் ஆசிரியர்.

பரம்பொருள : **Life Divine** என்ற பகவானுடைய நூலின் முதல் 5 அத்தியாயங்களை வரிக்கு வரி அர்த்தங்களை எடுத்துக் கூறி பிறகு ஆங்கிலத்திலும், தமிழிலும் அதன் சாராம்சத்தை மிக எளிமையாக எழுதியிருக்கிறார். பெரிய ஆங்கில மேதைகளுக்கும் ஞானிகளுக்கும் புரியாத இந்த நூல் பக்தி நம்பிக்கை உள்ள அன்னை அன்பர்கள் எளிதாக புரிந்து கொள்ளக்கூடிய வகையில் அமைந்துள்ளது.

ஸ்ரீ அரவிந்தம் தத்துவம் : சிருஷ்யின் இரகசியத்தை நாம் கேட்கக்கூடாது, தெரிந்து கொள்ளவும் கூடாது என்ற மரபில் வந்த நமக்கு, சிருஷ்டி எப்படி ஏற்பட்டது என்பதை தெளிவாகவும் விவரமாகவும், எடுத்துக்கூறும் நூல் லைப் டிவைன். இதில் 56 அத்தியாயங்கள் உள்ளது. ஸ்ரீ அரவிந்தம் தத்துவம் என்ற இப்புத்தகத்தில் சிருஷ்டி ஏற்பட்டதை எல்லோருக்கும் புரியக்கூடிய வகையிலே மிக எளிமையாக எழுதியிருக்கிறார் ஸ்ரீ கர்மயோகி உதாரணம் ஜடம் **Matter** எப்படி உற்பத்தியாயிற்று. அகந்தை உற்பத்தியான விதம் போன்ற நமக்கு தெரியாத உண்மைகளை சொல்லியிருக்கிறார்.

அருளமுதம்: வாழக்கையில் எவ்வளவோ பெயரும், பணமும், அந்தஸ்தும், வசதிகளும், இருந்தாலும், மனநிம்மதி இருக்காது. இதை பெறுவதற்கு மனிதர்கள் அலைவார்கள். எத்தனையோ

வெளிநாட்டவர்கள் இதை நாடி இந்தியா வந்திருக்கிறார்கள். நாம் அன்னையிடம் வந்தவுடன் இந்த மனநிம்மதியை அள்ளித்தந்துவிடும் ஸ்ரீ அன்னையின் கருணை. அது தாய்மையின் அம்சம். அன்னையிடம் வந்தவர்கள் அந்த மனநிம்மதியை அனுபவிக்க ஆரம்பித்து விட்டால் அவர்களுக்கு வேறு எங்கும், போக மனமே வராது. இது ஒவ்வொருவருடைய அனுபவம் என்றால் மிகையே இல்லை. மனிதர்கள் வாழ்க்கையில் எப்படி நிம்மதியை தொலைத்து விடுகிறார்கள் அதற்கான காரணங்கள் குணவிசேஷங்கள், சந்தரப்பங்கள் சூழ்நிலைகள், அன்னை வந்த பிறகு இவை எல்லாவற்றையும் புறக்ககணித்து அந்த “மனநிம்மதியை” கொடுத்து விடுகிறார் என்று “மனநிம்மதி” என்ற கட்டுரை விளக்கமாக எடுத்துச்சொல்கிறது. இதுதவிர, அன்னையின் முறைகளை விவரித்து அவற்றை கடைபிடித்தால் வாழ்க்கையில் பெறும் பலன்கள், நோயற்ற வாழ்வு, போன்ற கட்டுரைகளையும், இந்த புத்தகத்தில் காணலாம். இந்த புத்தகத்தை கையில் எடுத்துக் கொண்டு போனாலே போகிற காரியங்கள் வெற்றியாக முடிவது அன்பர்கள் அனுபவம்.